செய்தி வெளியீடு எண் :1605 நாள் : 09.08.2023

# மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

தமிழின் மிகப்பெரிய ஆளுமைகளில் ஒருவரும், பேரூராதினப் புலவர், கல்வெட்டியல் கலைச்செம்மல் என்று போற்றப்படும் புலவர் செ.இராசு அவர்கள் இன்று (09.08.2023) உடல்நலக் குறைவினால் காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.12.2021 அன்று தமிழறிஞர் புலவர் செ.இராசு அவர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து பரிவுத் தொகையாக ரூ.15 இலட்சம் காசோலை வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தற்போது அகழாய்வு நடந்து வரும் சங்க கால ஊரான கொடுமணம் (கொடுமணல்) கண்டறிந்தவர். தொன்மையான அரச்சலூர் இசைக் கல்வெட்டு (பிராமி) மற்றும் பாடல் வடிவில் பொறிக்கப்பட்ட அரிய கல்வெட்டான பழமங்கலம் நடுகல் மற்றும் பல முக்கியமான கல்வெட்டுகளை கண்டுபிடித்தவர். 450க்கும் மேற்பட்ட செப்பேட்டை படித்து தந்தவர். நினைவில் வாழும் புலவர் அவர்கள் 161 நூல்களும், 251 கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

மேலும் தமிழ்நாடு அரசின் உ.வே.சா. விருதினை முதன் முதலில் பெற்ற சிறப்புரியவர். தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் கல்வெட்டியல் துறைத் தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து செறிவான நடையில் பதிவிடுவது இவரது சிறப்பு...

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in